**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE.**
**TIRUVANNAMALAI.**
**MCOP No. 873 of 2022**
**Deposition of Witness for : RW 1**

| | | |
|---|---|---|
| Name | : | சின்ன பெருமாள் |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | ------ |
| Calling | : | |
| Religion | : | ------ |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 09.04.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவண்ணாமலை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் 22.05.2020 தேதியில் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு எண் டி.என். 25 ஏ.பி. 1843 என்ற ஆட்டோ ரிக்ஷா வாகனத்தின் தகுதிச் சான்று ஆவணத்தை அஜர்படுத்தி வாய்மொழி சாட்சியம் அளிக்குமாறு கேட்கப்பட்டு இருந்தது. மேற்படி வாகனத்தின் தகுதிச் சான்று எ.ம.சா.ஆ.1 மற்றும் அங்கீகார கடிதம் எ.ம.சா.ஆ.2. மேற்படி தகுதிச் சான்று எ.ம.சா.ஆ.1ல் ஆட்டோ ரிக்ஷாவிற்கான தகுதிச் சான்று காலாவதியாகிவிட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது.

**மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை** -

மேற்படி ஆட்டோ ரிக்ஷாவிற்கு முறையான தகுதிச் சான்று விபத்து சமயத்தில் இருந்தது என்று சொன்னால் சரியல்ல. 22.06.2018ல் இருந்து 27.06.2019 வரையில் மட்டுமே தகுதிச் சான்று அமுலில் இருந்தது. பிறகு 19.08.2020ல் இருந்து 18.08.2021 வரை தகுதிச் சான்று அமுலில் இருந்தது. 01.02.2020 முதல் 30.09.2020 வரை கொரானா காலக்கட்டம் என்பதால் தகுதிச் சான்று காலஅவகாசம் நீடிக்கப்பட்டது.

நான் ஆவணங்களை சரிவர பரிசீலிக்காமல் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u> -**

கொரானா காலகட்டத்தில் தகுதிச் சான்று கால அவகாசம் நீடிக்கப்பட்டது என தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.